2026 ஆகஸ்ட் மாதம் 12– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 4/2025

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW5 (LW5) – சஞ்சீவி |
| தகப்பனார் பெயர்: | அக்னித்தேவர் |
| ஊர்: | சின்ன ஓவுலாபுரம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 55 |

12.08.2026

(எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு, அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்ன ஓவுலாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நான் சின்ன ஓவுலாபுரம் கிராமத்தில் காதணிவிழா விசேஷம் வைத்தேன். கார்த்திக்கேயன் தந்தை மொக்கைப்பாண்டி எனது விசேஷத்திற்கு கார்த்திக்கேயன் பெயரில் ரூ.50,000/– செய்முறை செய்தார். கார்த்திக்கேயன் மொக்கைப்பாண்டியை குத்திவிட்டதாக கேள்விப்பட்டேன். செய்முறை

செய்ததால் தகராறு ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். மொக்கைப்பாண்டியை க.விலக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**</u>

செய்முறை கார்த்திக்கேயன் பெயரில் மொக்கைப்பாண்டி செய்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கார்த்திக்கேயன் தான் உண்மையில் செய்முறை செய்தார் என்றால் சரியல்ல. யார் மூலம் தகவல் தெரிந்து கொண்டேன் என்றால் ஊரில் பேசிக்கொண்டார்கள்.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 12.08.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.12 13:11:06 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
12.08.2026